DINATHANTHI

3 MAR 2023

PAGE 13




புதுவை பல்கலைக்கழக சமூகப்பணித்துறை சார்பில்

# வெளிச்சம் கிராமிய முகாம்

காரைக்கால், மார்ச்.3-

புதுவை பல்கலைக்கழகத்தில் உள்ள சமூகப்பணித்துறையில் பயிலும் முதலாம் ஆண்டு மாணவர்கள் சார்பில் காரைக்காலை அடுத்த திருநள்ளாறு நல்லழுந்தூர் கிராமத்தில் வெளிச்சம் கிராமிய முகாம் நேற்று நடைபெற்றது. புதுச்சேரி போக்குவரத்துத்துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமை தாங்கி முகாமை தொடங்கி வைத்தார். காரைக்கால் மாவட்ட கலெக்டர் முகமது மன்சூர் முன்னிலை வகித்தார். புதுவை பல்கலைக்கழகத்தின் காரைக்கால் வளாகப் பேராசிரியர் மற்றும் மையத் தலைவர் புவனேஸ்வரி, தாமனாங்குடி டான் போஸ்கோ கலை மற்றும் அறிவியல் கல்லூரி அருட்தந்தையர்கள் சேவியர் சதீஷ், மேத்யூ, திருநள்ளாறு கொம்யூன் ஆணையர் அருணாச்சலம் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

முகாமில் புற்றுநோய் விழிப்புணர்வு முகாம், சட்டக் கல்வியறிவு குறித்த நிகழ்ச்சி, தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை, பெண்கள் சுத்தம் மற்றும் சுகாதாரம் குறித்த நிகழ்ச்சி, கிராம மக்களுக்கான விளையாட்டு போட்டிகள் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகள் ஒரு வாரக்காலத்திற்கு நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. முகாமுக்கான ஏற்பாடுகளை பேராசியர் நளினி செய்துள்ளார்.

MAALAI MALAR

3 MARCH 2023

PAGE 2




சமுதாய கல்லூரியில்

# தேசிய அறிவியல் தின விழா

புதுச்சேரி,மார்ச்.3—

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் தேசிய அறிவியல் தின விழா 2 நாள் கொண்டாடப்பட்டது.

முதல்நாள் நடந்த போட்டியில் மாணவர்களுக்கு அறிவுத்திறன் போட்டிகள் நடந்தன. பல்கலைக்கழக உயிர்வேதியியல் துறை பேராசிரியர் மதுதியாவையா நடுவராக இருந்து வினாடி—வினா போட்டிகளை நடத்தினார்.

பல கல்லூரிகளை சேர்ந்த 50—க்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்றனர்.

2—ம் நாள் நிகழ்ச்சியில் சமுதாய கல்லூரி உயிர்வேதியியல் துறை பேராசிரியர் தாரா ஹேஸ்வரி வரவேற்றார்.

கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் கலைச்செல்வி, சுதாராணி ஆகியோர் சிறப்புரையாற்றினர். போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

துறை பேராசிரியர் வரலட்சுமி நன்றி கூறினார்.